# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - ஐரோப்பியர்களின் வருகை முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 8ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 55

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) ஆவணக் காப்பகங்கள் பற்றி சிறுகுறிப்பு தருக.

**பதில் :** 1. வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடம் ஆவணக்காப்பகம் என்று அழைக்கப்படுகிறது.
2. இந்திய தேசிய ஆவணக்காப்பகம் (NAI) புதுடெல்லியில் அமைந்துள்ளது. இது இந்திய அரசின் ஆவணங்களைப் பாதுகாக்கும் முதன்மைக் காப்பகமாகும்.

2) நாணயங்களின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.

**பதில் :** 1. நாணயங்கள் நிர்வாக வரலாற்றை அறிய ஒரு நல்ல ஆதாரமாக திகழ்கின்றன.
2. நவீன இந்தியாவின் முதல் நாணயம் கி.பி.1862 ஆம் ஆண்டில் ஆங்கில ஆட்சியில் வெளியிடப்பட்டது.

3) இளவரசர் ஹென்றி “மாலுமி ஹென்றி” என ஏன் அழைக்கப்படுகிறார்?

**பதில் :** போர்ச்சுகீசிய இளவரசர் ஹென்றி உலகின் அறியப்படாத பகுதிகளை ஆராயவும், சாகச வாழ்க்கையை மேற்கொள்ளவும் தனது நாட்டு மக்களை ஊக்குவித்ததால் அவர் மாலுமி ஹென்றி என்று அழைக்கப்படுகிறார்.

4) இந்தியாவில் டச்சுக்காரர்களால் நிறுவப்பட்ட முக்கிய வர்த்தக மையங்களின் பெயரை எழுதுக.

**பதில் :** **டச்சு வர்த்தக மையங்கள்:**
பழவேற்காடு, சூரத், சின்சுரா, காசிம் பஜார், பாட்னா, நாகப்பட்டினம், பாலசோர் மற்றும் கொச்சின் ஆகும்.

5) இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக.

**பதில் :** **ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்கள்:**
சூரத், ஆக்ரா, அகமதாபாத், புரோச், மசூலிப்பட்டினம், சென்னை, கல்கத்தா ஆகியவை ஆகும்.

6) ஆனந்த ரங்கம் பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** 1. தமிழ் வரலாற்றுக்கு குறிப்பு ஆவணங்களில் முக்கிய பங்காற்றியவர் ஆனந்தரங்கம். இவர் பாண்டிச்சேரி பிரெஞ்சு வர்த்தகத்தில் மொழி பெயர்ப்பாளராக இருந்தார்.
2. 1736 லிருந்து 1760 வரை அவர் எழுதிய பிரெஞ்சு இந்திய உறவு முறை பற்றிய அன்றாட நிகழ்வுகளின் குறிப்புகள் அரசியல் தீர்வுகளை வெளிப்படையாக விளக்கும் வரலாற்றாதாரமாக உள்ளன.

7) தமிழ்நாடு ஆவணக்காப்பகம் - குறிப்பு வரைக?

**பதில் :** 1. தமிழ்நாடு ஆவணக்காப்பகம் என்று அழைக்கப்படும் சென்னை பதிப்பாசனம் சென்னையில் அமைந்துள்ளது. இது தென்னிந்தியாவின் மிகப் பழமையான மற்றும் மிகப்பெரிய களஞ்சியங்களுள் ஒன்றாகும். அங்குள்ள பெரும்பாலான ஆவணங்கள் ஆங்கிலத்தில் உள்ளன.
2. மேலும் அங்கு, டச்சு, டேனிஷ், பாரசீக, மராத்திய நிர்வாக பதிவுகளின் தொகுப்புகள் பிரெஞ்சு, போர்ச்சுக்கீசிய, தமிழ், உருது போன்ற மொழிகளில் உள்ளன.

8) இந்தியக் கட்டடக் கலையின் கலை அம்சம் மற்றும் தொழில்நுட்பத்தின் சான்றாக விளங்குவன யாவை?

**பதில் :** i) புனித பிரான்சிஸ் ஆலயம் (கொச்சி)
ii) புனித லூயிஸ் கோட்டை (பாண்டிச்சேரி)
iii) புனித ஜார்ஜ் கோட்டை (சென்னை)
iv) புனித டேவிட் கோட்டை (கடலூர்)
v) இந்தியாகேட் (டெல்லி)
vi) பாராளுமன்றம் (டெல்லி).
vii) குடியரசுத்தலைவர் மாளிகை (டெல்லி)

9) “நீலநீர்க் கொள்கை" என்றால் என்ன?

**பதில் :** (i) பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா என்பவர் இந்தியாவிலிருந்த போர்ச்சுக்கீசிய பகுதிகளுக்கு அனுப்பப்பட்ட முதல் ஆளுநராவார்.
(ii) இந்தியாவில் போர்ச்சுக்கீசிய கப்பற்படையை பலப்படுத்துவதே அல்மெய்டாவின் நோக்கமாக இருந்தது.
(iii) அவர் பின்பற்றிய கொள்கை "நீலநீர்க் கொள்கை" என்று அழைக்கப்பட்டது.

10) அல்போன்சோ-டி-அல்புகர்க் பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** (i) இந்தியாவில் போர்ச்சுக்கீசிய அதிகாரத்தை உண்மையில் நிறுவியவர் அல்போன்சோ -டி-அல்புகர்க் ஆவார்.
(ii) அவர் பிஜப்பூர் சுல்தானிடமிருந்து 1510ல் கோவாவைக் கைப்பற்றினார்.
(iii) 1515ல் பாரசீக வளைகுடாவில் உள்ள ஆர்மஸ் துறைமுகப் பகுதியில் போர்ச்சுக்கீசிய அதிகாரத்தை விரிவுபடுத்தினார்.
(iv) அவர் இந்தியப் பெண்களுடனான போர்ச்சுக்கீசிய திருமணங்களை ஊக்குவித்தார்.
(v) விஜயநகரப் பேரரசுடன் நட்புறவை மேற்கொண்டார்.

11) சான்றுகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**பதில் :** சான்றுகள் இரண்டு வகைப்படும். அவை நாம் வரலாற்றை எழுதுவதற்கு எழுதப்பட்ட மற்றும் பயன்பாட்டு பொருள் ஆதாரங்கள் ஆகும்.

12) எழுதப்பட்ட ஆதாரங்கள் யாவை?

**பதில் :** எழுதப்பட்ட ஆதாரங்கள் என்பவை இலக்கியங்கள், பயணக்குறிப்புகள், நாட்குறிப்புகள் சுயசரிதை, துண்டு பிரசுரங்கள், அரசாங்க ஆவணங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

13) வாஸ்கோடகாமா- குறிப்பு வரைக.

**பதில் :** 1. வாஸ்கோடகாமா தென்னாப்பிரிக்காவின் தெற்கு முனையை அடைந்து அங்கிருந்து மொசாம்பிக் பகுதிக்குத் தனது பயணத்தைத் தொடர்ந்தார். பின்னர் இந்திய மாலுமி ஒருவரின் உதவியோடு கி.பி (பொ.ஆ) 1498 கள்ளிக்கோட்டையை அடைந்தார். மன்னர் சாமரின் அவரை வரவேற்றார்.
2. வாஸ்கோடகாமா 1501 இருபது கப்பல்களுடன் இரண்டாவது முறையாக இந்தியா வந்தடைந்தார். அப்பொழுது கண்ணனூரில் ஒரு வர்த்தக மையத்தை நிறுவினார். 1524-ல் வாஸ்கோடகாமா மூன்றாவது முறையாக இந்தியா வந்தபொழுது நோய்வாய்ப்பட்டு டிசம்பர் 1524-ல் கொச்சியில் காலமானார்.

14) நீலநீர்க்கொள்கை என்றால் என்ன?

**பதில் :** இந்தியாவில் போர்ச்சுக்கீசிய கப்பற்படையை பலப்படுத்துவதே அல்மெய்டாவின் நோக்கமாக இருந்தது அதற்காக அவர் பின்பற்றிய கொள்கை நீலநீர்க் கொள்கை.

15) பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் இந்தியாவில் நிறுவிய வணிக மையங்கள் யாவை?

**பதில் :** பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் இந்தியாவில் பல்வேறு இடங்களில் வர்த்தக மையங்களை நிறுவியது. குறிப்பாக கடலோரப் பகுதிகளான மாஹி, காரைக்கால், பாலசோர் மற்றும் காசிம் பசார் போன்ற இடங்கள் முக்கியமானவையாகும்.

## 5 மதிப்பெண் வினாக்கள் $5 \times 5 = 25$

16) நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக.

**பதில் : நவீன இந்திய வரலாற்றின் முதன்மை ஆதாரங்கள்:**
1. இந்தியக் கட்டடக் கலையின் கலை அம்சம் மற்றும் தொழில்நுட்பத்தின் சான்றாக புனித பிரான்சிஸ் ஆலயம் கொச்சி, புனித லூயிஸ் கோட்டை - பாண்டிச்சேரி, புனித ஜார்ஜ் கோட்டை - சென்னை, புனித டேவிட் கோட்டை - கடலூர், இந்தியா கேட், டெல்லி பாராளுமன்றம், குடியரசு தலைவர் மாளிகை ஆகியன உள்ளன.
2. சமய, கலாச்சார, வரலாற்று மதிப்புமிக்க மற்ற பொருள் மூலங்கள் சேகரிக்கப்பட்டு அவை அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன.
3. டெல்லியிலுள்ள மிகப்பெரிய அருங்காட்சியகம் இந்தியாவின் மிகப்பெரிய அருங்காட்சியகமாகும். இது 1949 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
4. நாணயங்கள் நிர்வாக வரலாற்றை அறிய ஒரு நல்ல ஆதாரமாக திகழ்கின்றன.
5. நவீன இந்தியாவின் முதல் நாணயம் கி.பி. 1862 ஆம் ஆண்டில் ஆங்கில ஆட்சியில் வெளியிடப்பட்டது.
6. இராணி விக்டோரியாவுக்குப் பிறகு அரியணை ஏறிய மன்னர் ஏழாம் எட்வர்டு தனது உருவம் தாங்கிய நாணயத்தை வெளியிட்டார்.
7. ரிசர்வ் வங்கி 1935ல் நிறுவப்பட்டு இந்திய அரசின் ரூபாய் நோட்டுக்களை வெளியிடும் அதிகாரத்தை பெற்றது.
8. மன்னர் ஆறாம் ஜார்ஜ் உருவம் தாங்கிய இந்தியாவின் முதல் 5 ரூபாய் நோட்டு ஜனவரி, 1938ல் ரிசர்வ் வங்கியால் வெளியிடப்பட்டது.

17) போர்ச்சுக்கீசியர்கள் எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர்?

பதில் : **போர்ச்சுக்கீசிய வணிக மையங்கள்:**

1. இந்தியாவில் போர்ச்சுகீசிய அதிகாரத்தை உண்மையில் நிறுவியவர் அல்போன்சா - டி - அல்புகர்க் ஆவார்.
2. அவர் பிஜப்பூர் சுல்தானிடமிருந்து 1510ல் கோவாவை கைப்பற்றினார்.
3. 1515ல் பாரசீக வளைகுடாவில் உள்ள ஆர்மஸ் துறைமுகப் பகுதியில் போர்ச்சுகீசிய அதிகாரத்தை விரிவுபடுத்தினார்.
4. அல்புகர்க்குவிற்கு பிறகு கவர்னரான நினோ-டி-குன்கா 1530ல் தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினர்.
5. போர்ச்சுகீசியர் 16ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் மேற்கு கடற்கரையில் கோவா, டையூ, டாமன், சால்செட், பசீன், சௌல் மற்றும் பம்பாய் போன்ற பகுதிகளைக் கைப்பற்றினர்.
6. வங்காளக் கடற்கரையில் ஹூக்ளி, சென்னை கடற்கரையில் சாந்தோம் போன்ற பகுதிகளைக் கைப்பற்றினார்.
7. 1556 ல் போர்ச்சுகீசியரால் கோவாவில் அச்சு இயந்திரம் அமைக்கப்பட்டது.
8. அச்சு இயந்திரத்தின் உதவியால் ஐரோப்பிய எழுத்தாளர் 1563ல் கோவாவில் இந்திய மருத்துவ தாவரங்கள் என்ற நூலை அச்சிட்டு வெளியிட்டார்.

18) ஆங்கிலேயர்கள் எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர்?

பதில் : **ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்கள் :**

1. இங்கிலாந்து இராணி எலிசபெத் கிழக்கிந்திய நாடுகளுடன் வர்த்தகம் செய்ய வர்த்தகங்கள் நிறுவனத்திற்கு ஒரு அனுமதி பட்டயம் 1600ம் ஆண்டு வழங்கினார்.
2. 1608 ஆம் ஆண்டு ஜஹாங்கீர் அவைக்கு மாலுமி வில்லியம் ஹாக்கின்ஸ் சில சலுகைகளைப் பெற அனுப்பி வைக்கப்பட்டார்.
3. அவர் சூரத் நகரில் ஒரு வணிக மையத்தை அமைக்க அனுமதி கோரினார். ஆனால் ஜஹாங்கீர் அனுமதி வழங்கவில்லை.
4. 1613ல் ஜஹாங்கீர் சூரத்தில் ஆங்கில வர்த்தக மையத்தை அமைக்க அனுமதித்தார்.
5. 1615ல் ஜஹாங்கீர் அவைக்கு இங்கிலாந்து மன்னர் ஜேம்ஸ் அவர்களால் சர் தாமஸ்ரோ அனுப்பப்பட்டார். அவர் ஆக்ராவில் மூன்றாண்டுகள் தங்கி ஜஹாங்கீரிடம் இந்தியாவில் வணிகம் செய்யும் உரிமையைப் பெற்றார்.
6. ஆக்ரா, அகமதாபாத் மற்றும் புரோச் ஆகிய இடங்களில் சர்தாமஸ் ரோ வணிக மையங்களை நிறுவினார்.
7. 1611ல் வங்காள விரிகுடா கடற்கரையில் உள்ள மசூலிப்பட்டிணத்தில் நிறுவினர்.
8. 1639ல் பிரான்சிஸ் டே என்ற ஆங்கில வணிகர் சென்னையை குத்தகைக்கு வாங்கி அங்கு கிழக்கிந்திய கம்பெனியால் புனித ஜார்ஜ் கோட்டை என்ற வணிக மையத்தை நிறுவியது.
9. இது ஆங்கிலேயரால் கட்டப்பட்ட முதல் கோட்டையாகும்.
10. இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ் போர்ச்சுகீசிய இளவரசி காத்ரினை திருமணம் செய்தற்காக திருமண சீதனமாக பம்பாயை பெற்றார்.
11. 1668ல் இரண்டாம் சார்லஸ் இடமிருந்து பம்பாயை குத்தகைக்கு (10 பவுண்டுகள்) கொடுத்து ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி குத்தகைக்கு பெற்றது.
12. 1700ல் கல்கத்தாவில் வில்லியம் கோட்டை கிழக்கிந்தியக் கம்பெனியால் கட்டப்பட்டது.

19) கான்ஸ்டாண்டி நோபிள் வீழ்ச்சி ஐரோப்பிய நாடுகளை எவ்வாறு பாதித்தது?

பதில் : கி.பி. (பொ.ஆ) 1453ல் துருக்கியர்களால் கான்ஸ்டாண்டி நோபிள் கைப்பற்றப்பட்ட பிறகு இந்தியாவிற்கும், ஐரோப்பாவிற்குமிடையிலான நிலவழி மூடப்பட்டது. துருக்கி வட ஆப்பிரிக்காவிலும், பால்கன் தீபகற்பத்திலும் நுழைந்தது. இது ஐரோப்பிய நாடுகளை கிழக்கு நாடுகளுக்குப் புதிய கடல் வழியைக் கண்டுபிடிக்கத் தூண்டியது.

20) வாஸ்கோடகாமா பற்றி எழுதுக.

பதில் : (i) வாஸ்கோடகாமா ஒரு போர்ச்சுக்கீசிய மாலுமியாவார்.

(ii) இவர் தென்னாப்பிரிக்காவின் தெற்கு முனையை அடைந்து அங்கிருந்து மொசாம்பிக் பகுதிக்குத் தனது பயணத்தை தொடர்ந்தார்.

(iii) இவர் இந்திய மாலுமி ஒருவரின் உதவியோடு கி.பி. 1498ல் கள்ளிக்கோட்டையை அடைந்தார்.

(iv) மன்னர் சாமரின் அவரை வரவேற்றார்.

(v) வாஸ்கோடகாமா 1501ல் இருபது கப்பல்களுடன் இரண்டாவது முறையாக இந்தியா வந்தடைந்தார்.

(vi) அப்பொழுது கண்ணனூரில் ஒரு வர்த்தக மையத்தை நிறுவினார். பின்னர் கள்ளிக்கோட்டை, கொச்சின் பகுதிகளிலும் வணிக மையங்களை நிறுவினார்.

(vii) இதனால் கோபம் கொண்ட மன்னர் சாமரின் போர்ச்சுக்கீசியரைத் தாக்கினார். ஆனால் அவர் போர்ச்சுக்கீசியர்களால் தோற்கடிக்கப்பட்டார்.

(viii) கொச்சின் போர்ச்சுக்கீசிய கம்பெனியின் முதல் தலைநகரமாயிற்று.

(ix) 1524ல் வாஸ்கோடகாமா மூன்றாவது முறையாக இந்தியா வந்தபொழுது நோய்வாய்ப்பட்டு கொச்சியில் 1524ல் காலமானார்.